# ஸ்வீடனிலுள்ள ஷால்க், பீட்டர் சேகரத்தினை எண்ணிமப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

பேராசிரியர் ஷால்க் என்பவர் ஸ்வீடிஷ் குடிமகன் மற்றும் ஸ்வீடனில் உள்ள உப்சாலா பல்கலைக்கழகத்தில் மதங்களின் வரலாற்றில் பேராசிரியராக உள்ளார். அவர் கருத்துகளின் வரலாறு, இறையியல் மற்றும் இந்தியவியல் ஆகியவற்றில் தேர்ச்சிபெற்றுள்ளார். மற்றும் பழைய மற்றும் நவீன இந்திய மதங்கள் குறித்து விரிவான ஆராய்ச்சியையும் மேற்கொண்டுள்ளார். அவர் இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்படும் முன்னேற்றங்களில் நெருக்கமான அக்கறை கொண்டிருந்ததோடு 1992 முதல் யாழ்ப்பாணம் குடிமக்கள் குழுவின் கௌரவ உறுப்பினராக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவர் பரந்தளவில் இலங்கை மற்றும் இலங்கையின் தமிழ் சமூகம் சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதுடன் அவை தொடர்பில் பல கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

## செயற்றிட்ட நோக்கம்

பேராசிரியர் ஷாக்லினுடைய இலங்கை தமிழ் சமூகம் பற்றிய சேகரங்கள் மிகவும் அரிதானவையும், முக்கியமானவையும் ஆகும். இவை எதிர்காலத்தில் பல ஆய்வுகளுக்கு மூல வளமாக அமையக்கூடியது. ஆகவே இவற்றை எண்ணிமப்படுத்தி பாதுகாத்து அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாக அமைகிறது.

## செயற்றிட்ட காலவரையறை

பேராசிரியர் ஷாக்லினுடைய சேகரத்திலுள்ள ஆவணங்களை கணக்கெடுத்து, பட்டியலிட்டு அவற்றை வகைப்படுத்தி எண்ணிமப்படுத்தி ஒரு வருட காலத்தினுள் செயற்றிட்ட முகப்பில் இணைப்பதன் மூலம் இச்செயற்றிட்டம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**